IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S .No.63 of 2010
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தேவராஜ் | Caste | : | |
| Father Name | : | குப்புசாமி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of June, 2026.

## குறுக்கு விசாரணை:

1. வழக்கு சொத்தை வாங்குவதற்கு முன்பாக தாவா சொத்தின் பாகப்பிரிவினை பத்திரமான 20.03.1981 ல் நடந்த பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அப்போது அந்த பத்திரத்தில் 1 ஏக்கர் 46 செண்ட் இருந்தது. வாதி சுப்பிரமணிக்கும் அவரது மகன் முத்தப்பன், மற்றும் கிருஷ்ணமூர்த்திக்கும், தாவா சொத்து சம்மந்தமாக எப்போது பாகப்பரிவினை ஏற்பட்டது என்றால் வாய்மொழியாக ஏற்பட்டது ஆனால் எப்போது ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை முத்தப்பன் எனக்கு எழுதி கொடுக்கும் போது சுமார் 40 வயது இருக்கும். எனக்கு விற்பனை செய்யும் போது முத்தப்பனுக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்ற விவரத்தை என்னிடம் சொன்னாரா என்றால் அவருக்கும், அவருடைய தம்பி கிருஷ்ணமூர்த்திக்கும் 96 செண்ட் ஒதுக்கியதாக கூறினார். சொத்தை விற்பனை செய்யும் போது அவருடைய தம்பி கிருஷ்ணமூர்த்திக்கு 14 வயது இருக்கும்.

2. கிருஷ்ணமூர்த்தி தகப்பானார் முதல் வாதியான சுப்ரமணி அப்போது உயிருடன் தான் இருந்தார் என்றால் ஆமாம். அதாவது கிருஷ்ணமூரத்தி இளவராக இருந்த நிலையில் அவருடைய

தகப்பானரான சுப்ரமணியிடம் இயற்கையான காப்பாளர் என்ற முறையில் கையெழுத்து ஏதும் வாங்கவில்லையா என்றால் கேட்டதற்கு அவருடைய பாகம் அதாவது கிருஷ்ணமூரத்தி பாகம் ஒதுக்கப்பட்டுவிட்டது. அதனால் அவரிடமே கேட்டு கொள்ளுங்கள் என்று கூறினார,. கிருஷ்ணமூர்த்தி பாகத்தையும் முத்தப்பன் தான் சேர்தது விற்பனை செய்தார் என்ற சொன்னால் சரிதான். தாவா சொத்து நான் வாங்கும் போது சொத்து கிருஷ்ணமூரத்தி தந்தையான சுப்ரமணி பெயரில் தான் இருந்தது.

3. சர்வே எண் 131/2A மற்றும் 131/2E ஆகிய சொத்துகள் இரண்டும் சுப்ரமணி பெயரில் தான் இருந்ததா என்றால் அது எந்த சொத்து யார் பெயரில் இருந்தது என்பது தெரியவில்லை. ஆனால் அது பூர்விக சொத்து ஆகும். அவர்களுக்கு பிதுராஜியமாய் இருந்தது. அதனால் விற்பனை செய்தார்கள். 30.04.1990 ல் வாதியான சுப்ரமணிக்கும் அகரிரெட்டிக்கும் நடந்த பரிவர்த்தனை பத்திரத்தை பற்றி நான் தாக்கல் செய்த 174/2010 என்ற வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சுப்ரமணி மகன்களான கிருஷ்ணமூரத்தி மற்றும் முத்தப்பன் ஆகியோர் எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை நான் இந்த வழக்கிலோ அல்லது 174/2010 என்ற வழக்கிலோ நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சான்றிடப்பட்ட நகலை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.09.1995 ல் நான் வாங்கிய கிரைய பத்திரத்தில் சர்வே எண் 131/2A, மற்றும் 131/2E சொத்து சம்மந்தமாக ஜக்பந்தி போட்டு நான் வாங்கவில்லை என்று சொன்னால் ஜக்பந்தி போடப்பட்டுள்ளது. அவ்வாறு நான் ஜக்பந்தி போடவில்லை

என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 07.04.1993 ல் முதல் வாதியும் மற்றும் அவருடைய மகன் முத்தப்பன் சேர்ந்து மணி என்பவருக்கு கிரைய பத்திரம் கொடுக்கப்பட்டது என்றாலும் அதை போல் 07.04.1993 ல் முதல் வாதி முத்தப்பனும் சேர்ந்து சுப்ரமணி என்பவருக்கு சொத்தை விற்பனை செய்த விவரத்தை நான் தாக்கல் செய்த விவரத்தை அசல் வழக்கு எண் 174/2010 வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF,
KATPADI.